உங்கள் அபிமான
தின தமிழ்
செய்திகளை உடனுக்குடன் தெரிந்து கொள்ள
வாட்ஸாப்பில் பின்தொடரவும்...

. 4 பக்கங்கள் . விலை ரூ. 5

# தின தமிழ்

தினசரி காலை நாளிதழ்
DHINA TAMIL
RNI No : TNTAM/2023/85936

வாசிப்பை சுவாசிப்போம்!
கைபேசியை தவிர்ப்போம்!
செய்தித்தாள் வாசிப்பை வழக்கமாக்கிக் கொள்வோம்!

www.dhinatamil.com • மாற்றத்தின் ஆரம்பம் • dhinatamil

• பதிப்பு : நாகர்கோவில் • 03.06.2026 • மலர் 04 • இதழ்: 154 • புதன்கிழமை • Edition : Nagercoil • 03.06.2026 • Vol : 04 • Issue : 154 • Page : 4 • Rs. 5/-

# பிரதமர் மோடியுடன் மியான்மர் அதிபர் ஆங் ஹ்லைங் சந்திப்பு

புதுடெல்லி,ஜூன் 3

இந்தியா வந்துள்ள மியான்மர் அதிபர் யு மின் ஆங் ஹ்லைங் பிரதமர் மோடியைச் சந்தித்து நடத்திய பேச்சு வார்த்தையில், வர்த்தகம், முதலீடு, எரிசக்தி உள்ளிட்ட துறைகளில் அதிக ஒத்துழைப்பை உருவாக்க முடிவு செய்யப்பட்டுள்ளது.

இந்தியா வந்துள்ள மியான்மர் அதிபர் யு மின் ஆங் ஹ்லைங், டெல்லியில் பிரதமர் நரேந்திர மோடியைச் சந்தித்துப் பேச்சு வார்த்தை நடத்தினார். இதில் பல்வேறு முக்கிய முடிவுகள் எடுக்கப்பட்டுள்ளன.

இது குறித்து வெளியுறவுத்துறை செயலாளர் விக்ரம் மிஸ்ரி இன்று செய்தியாளர்களிடம் விவரித்தார். அப்போது அவர் கூறியது: “பிரதமர் நரேந்திர மோடியும் மியான்மர் அதிபர் யு மின் ஆங் ஹ்லைங்கும் இரு தரப்பு விவகாரங்கள் தொடர்பாக முழுமையான விரிவான பேச்சு வார்த்தைகளை நடத்தினர். இந்த பேச்சு வார்த்தைகளில் வர்த்தகம், பொருளாதாரம், பாதுகாப்பு, எல்லை மேலாண்மை, மேம்பாட்டு உதவிகள், கலாச்சார பரிமாற்றங்கள், பிராந்திய சூழல் ஆகியவை இடம்பெற்றன. மக்களுக்கு இடையேயான தொடர்புகளுக்கு இணைப்பு வசதிகள்மிகமுக்கியம் என்பதை இரு தரப்பினரும் வலியுறுத்தினர். கலடன் பல்வகை போக்குவரத்து திட்டத்தை விரைவாக முடிக்க இணைந்து செயல்பட இருதரப்பும் ஒப்புக்கொண்டுள்ளது. மியான்மரின் இறையாண்மை மற்றும் பிராந்திய ஒருமைப்பாட்டுக்கு இந்தியாவின் ஆதரவு தொடரும் என்பதை பிரதமர் மோடி மீண்டும் உறுதிப்படுத்தினார்.

இரு நாடுகளின் பாதுகாப்புக்கு எதிரான நடவடிக்கைகளுக்கு தங்கள் எல்லைகள் தவறாகப் பயன்படுத்தப்படுவதை தடுப்பதன் முக்கியத்துவத்தை இரு தரப்பினரும் வலியுறுத்தினர். மியான்மரின் எல்லைப் பகுதிகள் இந்தியாவின் பாதுகாப்பு நலன்களுக்கு எதிராகப் பயன்படுத்தப்பட அனுமதிக்கப்பட மாட்டாது என்ற உறுதிமொழியை மியான்மர் அதிபர் மீண்டும் உறுதிபட தெரிவித்தார்.

மியான்மர் ஒரு முக்கிய நாடு, இந்தியாவுடன் 1,643 கிலோமீட்டர் எல்லையை பகிர்ந்து கொண்டிருக்கும் நாடு. இந்தியாவின் அண்டை நாடுகளுக்கு முன்னுரிமை, கிழக்கு நோக்கிய செயல்பாடு, மகாசாகர், இந்தோ பசுபிக் கொள்கைகளின் சங்கமமாக மியான்மர் அமைந்துள்ளது. இந்தியா மியானமருக்கு இடையேயான இருதரப்பு வர்த்தகம் 2 பில்லியன் டாலருக்கும் அதிகமாக உள்ளது. முக்கியத்துவம் வாய்ந்த கனிமங்கள், அரிய வகை மண் தனிமங்கள் துறையில் ஒத்துழைப்பை மேம்படுத்த முடிவு எடுக்கப்பட்டுள்ளது.

மியான்மரின் முன்னாள் அரசு ஆலோசகர் ஆங் சான் சூகி விவகாரத்தை பிரதமர் மோடி எழுப்பினார். மியான்மரில் நீண்ட காலமாக நடைபெற்று வரும் அமைதிக்கான முன்னெடுப்புகளின் பின்னணியிலேயே இந்த விவாதம் அமைந்திருந்தது. மியான்மருடனான இந்தியாவின் ஈடுபாடு, அந்நாட்டின் உள்நாட்டு அரசியல் ஏற்பாடுகள் குறித்த விமர்சனமாக அமையாது. ஜனநாயகம், அமைதிசெயல்முறை, அனைவரையும் உள்ளடக்கிய தன்மை போன்ற விவகாரங்கள் குறித்து இந்தியா தனது கருத்துக்களை எப்போதும் முன்வைத்து வந்துள்ளது” என்று அவர் தெரிவித்தார்.



# மம்தாவுக்கு எதிராக 50 எம்எல்ஏக்கள் போர்க்கொடி திரிணமூல் காங்கிரஸில் பிளவு



கொல்கத்தா, ஜூன் 3

“மம்தா பானர்ஜிக்கு எதிராக திரிணமூல் காங்கிரஸ் கட்சியின் 50 எம்எல்ஏக்கள் ஒன்றுபட்டுள்ளனர். அவர்கள் சட்டப்பேரவை திரிணமூல் காங்கிரஸ் கட்சியின் மூன்றில் இரண்டு பங்கு பெரும்பான்மையை பெறுவார்கள்” என்று அக்கட்சியில் இருந்து நீக்கப்பட்ட ரிஜூ தத்தா கூறியுள்ளார்.

நடந்து முடிந்த சட்டப்பேரவைத் தேர்தலில் மூன்று முறை தொடர்ந்து ஆட்சியில் இருந்த திரிணமூல் காங்கிரஸை வீழ்த்தி பாஜக ஆட்சியமைத்தது. மேற்கு வங்கத்தில் பாஜக 208 இடங்களில் வென்ற நிலையில், திரிணமூல் காங்கிரஸ் 80 இடங்களை மட்டுமே பிடித்தது. இதனையடுத்து திரிணமூல் காங்கிரஸ் கட்சியில் வெளிப்படையாக பிளவு வெடித்துள்ளது.

சமீபத்தில் நடந்த திரிணமூல் காங்கிரஸ் எம்எல்ஏக்கள் கூட்டத்தில் மொத்தமுள்ள 80 பேரில் 61 பேர் கலந்துகொள்ளவில்லை. இதனைத் தொடர்ந்து திரிணமூல் காங்கிரஸ் கட்சியின் சட்டப்பேரவை எதிர்க்கட்சி தலைவராக சோபன்தேப் சட்டோபாத்யாய் தேர்வு செய்யப்பட்டார். ஆனால், அவரை தேர்வு செய்யும் கடிதத்தில் தாங்கள் கையெழுத்து இடவில்லை என்று தெரிவித்த சந்தீபன் சஹா மற்றும் ரிதப்ரதா பானர்ஜி ஆகியோரைஅக்கட்சிநீக்கியது. இந்தப் போலி கையெழுத்து விவகாரம் குறித்து மேற்கு வங்க அரசு சிஐடி விசாரணைக்கும் உத்தரவிட்டுள்ளது.

இதுபற்றி பேசிய ரிஜு தத்தா, “மேற்கு வங்கத்தில் தற்போது மகாராஷ்டிரா பாணி அரசியல் சூழல் நிலவுகிறது. நாங்கள் திரிணமூல் காங்கிரஸ் கட்சியில் மூன்றில் இரண்டு பங்கு பெரும்பான்மையைக் கொண்டுள்ளோம். சுமார் 50 எம்எல்ஏக்கள் எங்கள் பக்கம் உள்ளனர். நாங்களே உண்மையான திரிணமூல் காங்கிரஸ் என்பதால், எதிர்க்கட்சித் தலைவராக ரிதப்ரதா பானர்ஜி இருப்பாரே தவிர, சோபன்தேப் சட்டோபாத்யாய் இருக்க மாட்டார். மேலும், அவர்களுக்கு பெரும்பான்மை உள்ளதால், கட்சியின் பெயரையும், சின்னத்தையும் தக்கவைத்துக்கொள்ள அவர்களையே அனுமதிக்க வேண்டும்” என்றார்.

‘தேர்தல் தோல்விக்குப் பிறகு திரிணமூல் தலைவர்கள் பலர் பாஜகவுக்கு மாறி வருகின்றனர். சிலர் தீவிர அரசியலில் இருந்து ஓய்வு பெறுவதாக அறிவித்து வருகின்றனர். முறைகேடுகள் காரணமாக மேற்கு வங்கத்தின் ஃபால்டா தொகுதியில் கடந்த மாதம் 29ம் தேதி மறுவாக்குப்பதிவு நடைபெற்றது. இந்த தொகுதியில் திரிணமூல் வேட்பாளராக போட்டியிட்ட ஜஹாங்கீர் கான் கடைசி நேரத்தில் தேர்தல் போட்டியில் இருந்து விலகுவதாக அறிவித்தார்.

இதே போல ஏராளமான திரிணமூல் தலைவர்கள் கட்சி நடவடிக்கைகளில் இருந்து விலகி வருகின்றனர். புதிய முதல்வர் சுவேந்து அதிகாரிக்கு சில திரிணமூல் எம்எல்ஏக்கள் பகிரங்கமாகவே ஆதரவு தெரிவித்து உள்ளனர்.

திரிணமூல் எம்பி ககோலி கோஷ் அண்மையில் கட்சியின் அனைத்து பொறுப்புகளில் இருந்தும் விலகினார். முதல்வர் சுவேந்து அதிகாரியுடன் அவர் நெருக்கமாக உள்ளார். தற்போதைய சூழலில் திரிணமூல் காங்கிரஸுக்கு 28 மக்களவை எம்பிக்கள், 13 மாநிலங்களவை எம்பிக்கள் உள்ளனர். இதில் 20 எம்பிக்கள் பாஜகவுடன் தொடர்பில் இருப்பதாக தகவல்கள் வெளியாகி உள்ளதும் கவனிக்கத்தக்கது. 2022 ஆம் ஆண்டில் சிவ சேனா கட்சி இரண்டு பிரிவுகளாக உடைந்தது. அதன் விளைவாக அப்போதைய உத்தவ் தாக்கரே தலைமையிலான ‘மகா விகாஸ் அகாதி’ கூட்டணி அரசு மகாராஷ்டிராவில் ஆட்சியிலிருந்து அகற்றப்பட்டது.

சிவசேனாவின் பெரும்பான்மை எம்எல்ஏக்கள் ஏக்நாத் ஷிண்டே பக்கம் இருந்ததால், பாஜக ஆதரவுடன் அவர் முதல்வரானார். மேலும், கட்சியின் பெயர் மற்றும் சின்னம் ஷிண்டேவுக்கே கிடைத்தது. அதே பாணியில் இப்போது திரிணமூல் காங்கிரஸில் பிளவு ஏற்பட வாய்ப்புள்ளதாக தகவல்கள் வெளியாகியுள்ளன.

தின தமிழ்
நிருபர்கள் தேவை
வெற்றிகரமாக தொடர்ந்து 4 ஆண்டுகளாக
தமிழகம் முழுவதும் பிரிண்ட் ஆகி வெளிவந்து கொண்டிருக்கும் தின தமிழ் நாளிதழுக்கு மாவட்ட வாரியாக நிருபர்கள் மற்றும் போட்டோகிராபர்கள் தேவை
தகுதிகள்
குற்றவழக்குகள் இருக்கக் கூடாது. முன் அனுபவம், பட்டதாரி, தமிழில் உரையாடுதல், தமிழில் பிழையின்றி எழுதுதல், தகவல் பரிமாற்றத் திறன்
மேற்கண்ட தகுதிகள் பெற்றிருப்பவர்கள் கீழ்க்கண்ட எண்ணிற்கு தொடர்பு கொள்ளலாம்
99944 66200 – 70102 64701

# புனித பூமியான திருவண்ணாமலையில் பெண்ணுக்கு எதிராக அரங்கேறிய கொடூரம்

## நயினார் நாகேந்திரன் கண்டனம்

சென்னை, ஜூன் 3

தமிழக பாஜக தலைவர் நயினார் நாகேந்திரன் வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவித்திருப்பதாவது:

புனித பூமியான திருவண்ணாமலையில் பெண்ணுக்கு எதிராகஅரங்கேறியகொடூரம்:பெண்களின்பாதுகாப்பை காற்றில் பறக்கவிட்ட தவெக அரசுக்கு கண்டனம்!

திருவண்ணாமலை கிரிவலப்பாதை அருகே உள்ள ஏரிக்கரையில் பெண் ஒருவருக்கு பாலியல் தொல்லை அளித்து, நகை பறிப்பு செய்ததோடு, அவரை அரைநிர்வாணப்படுத்தி ஆபாச படம் எடுத்து மிரட்டியுள்ள கொடூர சம்பவம் ஒட்டுமொத்த தமிழகத்தையும் அதிர்ச்சியில் ஆழ்த்தியுள்ளது. பக்தி மணம் கமழும் புனிதமான திருவண்ணாமலையில், இத்தகையமிருகத்தனமானசம்பவம்அரங்கேறியிருப்பது மிகுந்த வேதனையளிக்கிறது.

மேடைகளில் மகளிர் உரிமை குறித்தும், புதியதொரு மாற்றம் குறித்தும் வாய்ஜாலம் காட்டி ஆட்சிக்கு வந்த தவெக அரசு, இன்று முந்தைய திமுக அரசை போலவே பெண்களின் பாதுகாப்பை உறுதி செய்ய தவறி முழுமையாக முடங்கி கிடக்கிறது. மக்கள் நடமாட்டம் உள்ள கிரிவலப்பாதை பகுதியிலேயே 10 பேர் கொண்ட கும்பல் இத்தகையதுணிகரமானகுற்றத்தில்ஈடுபடுகிறது என்றால், மாநிலத்தில் சட்டம் ஒழுங்கு எந்த அளவிற்கு சீர்குலைந்துள்ளது என்பதற்கு இதைவிட வேறு சான்று தேவையில்லை.

இச்சம்பவத்தில் தொடர்புடைய 10 பேர் கொண்ட கும்பலில் தற்போது பிடிபட்டுள்ளவர்கள் மட்டுமின்றி, தலைமறைவாகஉள்ளமற்றஅனைவரையும்உடனடியாக கைது செய்து, அவர்கள் மீது கடுமையான பிரிவுகளின் கீழ் வழக்குப்பதிவு செய்து விரைந்து தண்டனை பெற்றுத் தர வேண்டும் என வலியுறுத்தி கேட்டுக்கொள்கிறேன்.

இவ்வாறு அதில் தெரிவித்துள்ளார்.

# தமிழக சட்டசபை செயலாளர் சீனிவாசன் திடீர் ராஜினாமா



சென்னை, ஜூன் 3

தமிழக சட்டசபை செயலாளராக செயல்பட்டு வந்தவர் சீனிவாசன். இவர் கடந்த 15 ஆண்டுகளாக சட்டசபை செயலாளராக பணியாற்றி வந்தார். அதாவது, தி.மு.க., அ.தி.மு.க. ஆட்சி காலத்தில் அப்பதவியில் தொடர்ந்த அவர், த.வெ.க. ஆட்சியிலும் நீடித்தார். இந்த நிலையில், சட்டசபை செயலாளர் பதவியை சீனிவாசன் திடீரென ராஜினாமா செய்துள்ளார். இது தொடர்பான அதிகாரப்பூர்வதகவல்இன்னும்வெளியாகவில்லை என்றாலும், 35 ஆண்டுகளுக்கும்மேலாகசட்டசபை அனுபவம் கொண்ட ஒருவர், ராஜினாமா செய்திருப்பது த.வெ.க. அரசுக்கு பின்னடைவாக பார்க்கப்படுகிறது. சட்டசபைசெயலாளர்பதவியில் இருந்து சீனிவாசன் ராஜினாமா செய்வதற்கான காரணம் எதுவும் வெளியாகவில்லை.

# கஞ்சா விற்பனையை தட்டிக் கேட்டால் கொலை தான் இந்த ஆட்சியில் பதிலா..?

## எடப்பாடி பழனிசாமி சரமாரி கேள்வி



சென்னை, ஜூன் 3

அ.தி.மு.க. பொதுச்செயலாளர் எடப்பாடி பழனிசாமி வெளியிட்டுள்ள அறிக்கையில் கூறியிருப்பதாவது:

சென்னை தண்டையார்பேட்டையில் கஞ்சா விற்பனையை தட்டிக் கேட்ட 23 வயது இளைஞர் விஷ்ணு என்பவர் அடித்துக் கொலை செய்யப்பட்டிருப்பதாக வரும் செய்தி அதிர்ச்சியளிக்கிறது. போதைப் பொருள் புழக்கத்தை தட்டிக் கேட்டால் கொலை தான் இந்த ஆட்சியில் பதிலா? இது தான் மாற்றமா?

இந்தலட்சணத்தில், நேற்று திருச்சியில் பேசிய இன்றைய முதல்அமைச்சர் தன் மீது வீண் பழி போடுவதாக வேறு ஆதங்கப்படுகிறார். இவர் அதிகாரிகளை நியமித்துவிட்டாராம். நியமித்தால் போதுமா? இதே அதிகாரிகள் தானே எல்லா ஆட்சியிலும் பணி புரிகிறார்கள்? மாற்றம் என்பது ஆட்சியாளரிடம் வர வேண்டும்.

காவல்துறையை கையில் வைத்திருப்பவர், சட்டம் ஒழுங்கிற்கு பொறுப்பேற்காமல் நழுவ முயல்வது வெட்கக்கேடு! இதில், போதைப்பொருளை தன்னால் ஒழிக்க முடியாது என்று மறைமுகமாக ஒப்புதல் வாக்குமூலம் வேறு அளித்துள்ளார்.

மேலும், சிங்கப்பெண் அதிரடிப் படையை அடுத்த வாரம் துவக்கி வைப்பாராம்.. கடந்த வாரம் அனைத்து ஏற்பாடுகளும் தயாராக இருந்த நிலையில், எதற்கு நீங்கள் கடைசி நிமிடத்தில் ரத்து செய்தீர்கள்? உங்கள் உதவியாளர் வீட்டு விழாவை சிறப்பிக்க தமிழகப் பெண்களின் பாதுகாப்பை Compromise செய்தீர்களா? நீங்கள் அடுத்த வாரம் துவக்கும் வரை தமிழகப் பெண்கள் பாதுகாப்பு இன்றி இருக்க வேண்டுமா?

“ஆட்சி நடத்துவது எப்படி” என நீங்கள் ஆறு மாத Crash Course முடிப்பதற்குள் மக்கள் மடிந்துக் கொண்டே இருக்க வேண்டுமா? அதை யாரும் கேள்வி கேட்கக் கூடாதா?

ஒரு முறையான முதல்அமைச்சராக இல்லாவிடினும், ஒரு கட்சித் தலைவராகவாவது முறையாக உள்ளாரா என்றால், அதுவும் இல்லை!

தூத்துக்குடி அருகே கூட்டுப் பாலியல் வன்கொடுமை வழக்கில் ஆளுங்கட்சி தவெக நிர்வாகிகள் இருவர் கைது செய்யப்பட்டுள்ளதாக செய்திகள் வருகின்றன. கடந்த 3 வாரங்களில் எத்தனை ஆளுங்கட்சி நிர்வாகிகள் கொடும் குற்றச் செயல்களுக்காக கைது செய்யப்பட்டு உள்ளார்கள்? ஒரு கட்சித் தலைவராக, தன் கட்சியினரை அடக்கி வைக்க வக்கில்லாதவர், எப்படி காவல்துறையை நிர்வகிப்பார்?

இப்படிப்பட்ட ஆட்சி எப்படி மக்களைக் காக்கும்? எப்படி பெண்கள் பாதுகாப்பை உறுதி செய்யும்? . தான் வகிக்கும் பொறுப்பின் தன்மை உணராமல், இன்னும் பஞ்ச் டயலாக் பேசும் ரீல் ஹீரோவாகவே தன்னை பாவித்துக் கொள்ளும் பொய்க்கால் குதிரை அரசின் முதல்அமைச்சர் அந்த மாய உலகில் இருந்து வெளியே வந்து, தான் வகிக்கும் பொறுப்பின் தலையாயப் பணியான சட்டம் ஒழுங்கைக் காக்கும் Responsibility எடுத்து, நடவடிக்கைகள் மேற்கொள்ள வேண்டும் என வலியுறுத்துகிறேன்.

இவ்வாறு அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## ஸ்ரீவைகுண்டம் சம்பவம்

# திமுக மீது பழி போடுவதை நிறுத்திவிட்டு பெண்கள் பாதுகாப்பில் கவனம் செலுத்துங்கள்: கனிமொழி



ஸ்ரீவைகுண்டம், ஜூன் 3

திமுக துணைப் பொதுச்செயலாளர் கனிமொழி எம்.பி தனது எக்ஸ் தளப் பதிவில் தெரிவித்திருப்பதாவது:

ஸ்ரீவைகுண்டம் அருகே பெண் ஒருவர் தவெக நிர்வாகிகள் இருவரால் வேலை வாங்கித் தருவதாக அழைத்துச் செல்லப்பட்டு, மயக்கமருந்து கொடுத்து பாலியல் வன்கொடுமைக்கு ஆளாக்கப்பட்ட செய்தி அதிர்ச்சியும் வேதனையும் அளிக்கிறது.

பெண்கள் பாதுகாப்பு பெரும் கேள்விக்குறியாகியுள்ள இன்றைய சூழலில், தேர்தல் காலத்தைப் போல திமுகவின் மீது பழி போடுவதை நிறுத்திவிட்டு, தாங்கள்தான் ஆளுங்கட்சி என்பதை உணர்ந்து 'பொறுப்புடன்' முதல்அமைச்சர் விஜய் செயல்பட போவது எப்போது?.

இவ்வாறு அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# சாமிதோப்பு அய்யா வைகுண்டசாமி தலைமைப்பதியில் வைகாசி திருவிழா தேரோட்டம்



தென்தாமரைகுளம் ஜூன். 03

சாமிதோப்பு அய்யா வைகுண்டசாமி தலைமைப்பதியில் வைகாசி திருவிழா தேரோட்டம் நேற்று நடைபெற்றது. சாமிதோப்பு அய்யா வைகுண்டசாமி தலைமை ப்பதியில் வைகாசி திருவிழா கடந்த 22 ம் தேதி காலை கொடியேற்றத் துடன் தொடங்கியது.

விழா தொடர்ந்து 11 நாட்கள் நடைபெற்றது. விழாவின் 11வது நாளான நேற்று நண்பகல் 12 மணிக்கு தேரோட்டம் நடைபெற்றது. தேரோட்ட நிகழ்ச்சியை முன்னிட்டு நேற்று அதிகாலை 4 மணிக்கு திரு நடைதிறத்தலும், தொடர்ந்து அய்யாவுக்கு சிறப்பு பணிவிடையும் நடைபெற்றது. தொடர்ந்து நண்பகல் 12 மணிக்கு அய்யா வைகுண்ட சாமி பச்சை பல்லாக்கு வாகனத்தில் வந்து பஞ்சவர்ண தேருக்கு எழுந்தருளும் நிகழ்ச்சி நடந்தது.தொடர்ந்து 12 மணிக்கு அலங்கரிக்கப்பட்ட பஞ்சவர்ணதேரில்அய்யாவீற்றிருக்கதேரோட்டம் தொடங்கியது. .

தலைமைப்பதியின் முன்பிருந்து புறப்பட்ட திருத்தேர் கீழரத வீதி, தெற்கு ரத வீதி, மேல ரத வீதி வழியாக வடக்கு ரத வீதியில் உள்ள தலைமைப்பதியின் வடக்கு வாசல் பகுதிக்கு வந்தது. திருத்தேர்வடக்குவாசல்பகுதிக்குவரும் போது திரளான அய்யாவழி பக்தர்கள் அய்யா வைகுண்டசாமிக்கு பழம், வெற்றிலை, பாக்கு, பன்னீர் உள்ளிட்ட பொருட்களை நீண்ட வரிசையில் நின்று சுருளாக படைத்தனர். பின்னர் அங்கிருந்து புறப்பட்ட திருத்தேர் மாலை 6 மணிக்கு நிலைக்கு வந்தடைந்தது. தேரோட்ட நிகழ்ச்சியில் பல்வேறு மாவட்டங்களைச் சேர்ந்த அய்யா வழி பக்தர்கள் திரளாக கலந்து கொண்டனர். பின்னர் நேற்று இரவு 7 மணிக்கு அய்யாவின் ரிஷப வாகன ஊர்வலம் நடைபெற்றது.பின்னர் அதிகாலை அய்யாவுக்கு பணிவிடையும் தொடர்ந்து திருக்கொடி இறக்கம் நிகழ்ச்சியும் நடைபெற்றது. விழா ஏற்பாடுகளை குருமார்கள் பையன் ராஜா, பால் பையன், பையன் காமராஜ், பையன், பையன் ஸ்ரீராம், பையன் சிவராஜ்,பையன் பொன்ராஜ், ஸ்ரீராம பையன் ஆகியோர் செய்திருந்தனர்.




# மாணவர்களுக்கான உயர்கல்வி வழிகாட்டுதல் பயிற்சி

தென்தாமரைகுளம்., ஜூன். 03

களியக்காவிளை நாஞ்சில் கத்தோலிக்க கலை மற்றும் அறிவியல் கல்லூரி மற்றும் கன்னியாகுமரி சமூக சேவை சங்கத்தின் வழிகாட்டுதலோடு குமரி கடலோசை மக்கள் இயத்தின் முயற்சியால் மாணவர்களுக்கான உயர்கல்வி வழிகாட்டுதல் பயிற்சியானது, ஹெலன் நகர், புனித சவேரியார் சமூக நலக்கூடத்தில் வைத்து நடைபெற்றது. இதில் குமரி கடலோசை மக்கள் இயக்கத்தின் இயக்குனர் ஆல்பின் ராபி தலைமை தாங்க, கோணம் அரசு பொறியியல் கல்லூரியின் இயற்பியல் பேராசிரியர் வின்சென்ட் ஜெரின் மாணவர்களையும் அவரது பெற்றோர்களையும் நெறிப்படுத்தினார். மாணவர்கள் எப்படி மேல்படிப்பிற்கான துறைகளை தேர்வு செய்ய வேண்டும், எந்த கல்லூரிகளை சரியாக தேர்ந்தெடுக்க வேண்டும், வாழ்வில் வெற்றி இலக்கை நோக்கி எப்படி பயணிக்க வேண்டும், என்பது போன்ற நலமான கருத்துக்களை பகிர்ந்தார். மாணவர்களுக்கு இது பயனுள்ளதாக அமைந்தது. இதில் ஏராளமான மாணவர்களும் பெற்றோரும் கலந்து கொண்டார்கள். குறிப்பாக, கீழ்குளம், இணையம், மிடாலம், ராமன் துறை, மற்றும் முள்ளூர்துறை ஆகிய பகுதிகளிலிருந்து ஏராளமானோர் கலந்து கொண்டனர். இந்நிகழ்வை களியக்காவிளை நாஞ்சில் கத்தோலிக்க கலை மற்றும் அறிவியல் கல்லூரியின் முதலாம் ஆண்டு முதுநிலை சமூக பணி துறை மாணவர் ஜாண் போஸ்கோ. ஜெ ஒருங்கிணைத்து வழிநடத்தினார்.




# கோவை அதிமுக சார்பில் அஞ்சலி செலுத்தும் நிகழ்ச்சி

கோவை ஜூன்:03

கோவை மாநகர் மாவட்டம் இதய தெய்வம் மாளிகையில் கழகம் ஒன்றனைய வேண்டி தஞ்சை கிழக்கு மாவட்ட வர்த்தக அணி இணைச் செயலாளர் மகேந்திரன் தன் உயிரை மாய்த்துக் கொண்டார்.அவருக்கு கோவை மாவட்ட கழகத்தின் சார்பில் அஞ்சலி செலுத்தும் நிகழ்ச்சியானது கழக அம்மா பேரவை இணைச் செயலாளர் கோவை மாநகர் மாவட்ட எம் ஜி ஆர் இளைஞர் அணி செயலாளர் கே ஆர் ஜெயராம் தலைமையில் நடைபெற்றது.

நிகழ்ச்சியில் கழக மாணவரணி செயலாளர் சிங்கை ஜி இராமச்சந்திரன் மாவட்ட நிர்வாகிகள் துரைசாமி, பார்த்திபன், லீலாவதி உன்னி கழக இலக்கிய அணி செயலாளர் ப கழகப் பொதுக்குழு உறுப்பினர் சிங்கை பாலன் மாநில சார்பு அணி செயலாளர் எஸ் ஆர் ரவி அசோக்குமார், தமிழ் முருகன், பப்பாயா ராஜேஷ், சக்திவேல், பகுதி கழக செயலாளர் சுப மணிகண்டன் மௌனசாமி நடராஜ் காட்டூர் செல்வராஜ் செல்வகுமார் ராஜ்குமார் சந்திரசேகர் சிவக்குமார் உலகநாதன் வெள்ளியங்கிரி வடவள்ளி கிருஷ்ணசாமி ராயப்பன் மற்றும் கழகச் செயலாளர்கள் மகளிர் அணி நிர்வாகிகள் மற்றும் கழக நிர்வாகிகள் ஆகியோர் அஞ்சலி செலுத்தினர்

# அருமனை குடியிருப்பு பகுதியில் உலாவிய 3 யானைகள் கூட்டம்

## பட்டாசு வெடித்து விரட்டிய வனத்துறை



மார்த்தாண்டம், ஜூன். 3

அருமனை அருகே கடையாலுமூடு பேரூராட்சிக்குட்பட்ட மருதம்பாறை பகுதியில் ரப்பர் தோட்டங்கள் உள்ளன.இங்குள்ள குடியிருப்பு பகுதியில் 200க்கும் மேற்பட்ட வீடுகள் உள்ளன. இதற்கிடையே நேற்று காலை சுமார் 6:30 மணிக்கு 3 யானைகள் கூட்டமாக ரப்பர் தோட்டத்தில் உலாவி கொண்டிருந்தன. இதை அந்த பகுதியை சேர்ந்த கல்லூரி மாணவர் ஒருவர் பார்த்து அதிர்ச்சி அடைந்தார். தொடர்ந்து கிராம மக்களுக்கு யானைகள் கூட்டம் குறித்து தகவல் தெரிவிக்கப்பட்டது.

உடனே உஷாரான கிராம மக்கள் அதிக சத்தம் எழுப்பியவாறு யானை கூட்டத்தை காட்டுக்குள் விரட்ட முயன்றனர். ஆனால் யானை கூட்டம் கருமலை அடித்தோட்டம் வழியாக குடியிருப்பு பகுதியை சுற்றி வர தொடங்கின. இதனால் பயந்து போன மக்கள் கூட்டத்தில் ஒரு பகுதியினர் பின் வாங்கினர்.


பின்னர் வனத்துறையினருக்கு பொதுமக்கள் தகவல் தெரிவித்தனர். இதை அடுத்து வனச்சரகர் முகைதீன் தலைமையில் குழுவினர்சம்பவ இடத்திற்கு விரைந்து சென்றனர். பின்னர் பட்டாசுகள் வெடித்து யானை கூட்டத்தை காட்டுக்குள் விரட்டும் முயற்சியில் ஈடுபட்டனர்.

இதில் மூன்று யானைகளும் மூன்று திசைகளுக்கு பிரிந்து சென்றுவிட்டன. இதனால் யானைகள் எந்த எல்லையில் நிற்கிறது என்பது தெரியாமல் வனத்துறையினர் திணறினர். மலைப்பகுதிகளில் உள்ள வழிகளில் மேடும் பள்ளமுமாக காணப்படுவதால் யானைகள் நடமாட்டத்தை வனத்துறையினரால் சரியாக கணிக்க முடியவில்லை. இதனால் பொதுமக்கள் பெரும் குழப்பம் அடைந்துள்ளனர்.

பொதுமக்களுக்கு ஆபத்து ஏதும் நேர்ந்து விடக்கூடாது என்பதற்காக அவர்களை எச்சரிக்கையாக இருக்குமாறு வனத்துறையினர் அறிவுறுதியுள்ளனர். யானை கூட்டம் நேற்று காலை எப்படி மருதம் பாறை பகுதிக்கு ஊடுருவியது என்பது குறித்து வனத்துறையினர் விசாரித்தனர். விசாரணையில் காந்திமதி தோட்டத்தின் உள்பகுதிக்கு வந்த யானை கூட்டங்கள், கேட்டை உடைத்து கணபதிகல், மருதம் பாறை வழியாக பேணு பகுதி வழியாக கருஞ்சிறை பகுதியில் உலாவியது தெரிய வந்தது.

# தக்கலை அருகே பைக்குகள் மோதல்

## நர்சிங் மாணவர் பலி மற்றொருவர் படுகாயம்



தக்கலை, ஜூன். 3

குளச்சலை அடுத்த கல்லுக்கூட்டம் பகுதியை சேர்ந்தவர்சுந்தர்மகன்அஸ்வின் (26).இவர் நெய்யூரில் உள்ள தனியார் நர்சிங் கல்லூரியில் படித்து வந்தார். நேற்று முன்தினம் இரவு அஸ்வின் மோட்டார்சைக்கிளில்கருங்கல் பகுதிக்கு சென்றுவிட்டு, அங்கிருந்து திங்கள்நகர் நோக்கி திரும்பி சென்று கொண்டிருந்தார். திக்கணங்கோடு அருகே வைத்து எதிரே வந்த ஒரு மோட்டார் சைக்கிள் நேருக்கு நேர் மோதி உள்ளது.

இந்த வித்தில் அஸ்வின் மற்றும் எதிரே வந்த மோட்டார் சைக்கிளில் வந்த இருவரும் தூக்கி வீசப்பட்டனர். சாலையில் ஆபத்தாக கிடந்த இரண்டு பேரையும் அந்த பகுதியினர் மீட்டு அங்குள்ள தனியார் ஆஸ்பத்திரி சேர்த்தனர். அங்கு முதலுதவி சிகிட்சைக்கு பின்னர் அஸ்வின் மேல் சிகிச்சைக்காக குமரி அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனைக்கு அனுப்பி வைக்கப்பட்டார். ஆனால் வழியிலே அஸ்வின் உயிரிழந்தார். மோட்டார் சைக்கிள் மோதி நர்சிங் மாணவர் பலியான சம்பவம் அந்த பகுதியில் சோகத்தை ஏற்படுத்தியுள்ளது. விபத்து குறைத்து அவரது தாயார் கலா தக்கலை போலீசில் புகார் அளித்தார். போலீசார் வழக்கு பதிவு செய்து விசாரித்து வருகின்றனர். இந்த விபத்தில் சிக்கிய மற்றொரு மோட்டார் சைக்கிளில் வந்த திக்கணங்கோடு அபினேஷ் (22)என்பவர்மீதுபோலீசார்வழக்குபதிவுசெய்துள்ளனர். அவர் விபத்தில் காயமடைந்து அந்த பகுதியில் உள்ள தனியார் ஆஸ்பத்திரியில் சிகிச்சை பெற்று வருகிறார்.

# தொடர் பைக் திருட்டு: 2 சிறுவர்கள் உள்பட 4 பேர் கைது; 6 பைக்குகள் பறிமுதல்

நெல்லை, ஜூன் 3

நெல்லை அருகே உள்ள சுத்தமல்லி, கொண்டாநகரம், ராஜீவ்காந்தி நகர், சிவசக்தி நகர், பழவூர், பட்டன்கல்லூர் உள்ளிட்ட பகுதிகளில் வீடுகளின் முன்பு நிறுத்தி வைக்கப்பட்டிருந்த 6 மோட்டார் சைக்கிள்கள் வெவ்வேறு நாட்களில் நள்ளிரவில் திருடு போயின.

இதுகுறித்து பாதிக்கப்பட்ட ரஞ்சித் (வயது 30), மகாராஜன்(56) உள்ளிட்ட 6 பேர் அளித்த புகாரின் பேரில், சுத்தமல்லி போலீஸ் இன்ஸ்பெக்டர் சுந்தரமூர்த்தி தலைமையிலான தனிப்படை போலீசார் தீவிர விசாரணை மேற்கொண்டு வந்தனர். சம்பவ இடங்களில் இருந்த சிசிடிவி கேமரா காட்சிகள் மற்றும் ரகசிய தகவல்களின் அடிப்படையில் போலீசார் நடத்திய சோதனையில் பைக் திருட்டு சம்பவங்களில் ஈடுபட்ட பல்லிக்கோட்டை மற்றும் ராஜவல்லிபுரத்தைச் சேர்ந்த 17 வயதுடைய 2 சிறுவர்கள், அரசன்குளத்தைச் சேர்ந்த இசக்கிராஜா(19), உகந்தான்பட்டியைச் சேர்ந்த அருணாச்சலம்(19) ஆகிய 4 பேரை கைது செய்தனர். கைது செய்யப்பட்ட நபர்களிடமிருந்து திருடப்பட்ட 6 பைக்குகளும் மீட்கப்பட்டன. மேலும் இந்தத்திருட்டுச்சம்பவங்களில் தொடர்புடைய, தற்போது தலைமறைவாக உள்ள மற்றொரு நபரை போலீசார் தீவிரமாக தேடி வருகின்றனர்.




# இந்தியாஆசியான் வர்த்தக கவுன்சிலின் வர்த்தகத் தூதராக சி.எம். விஷ்ணு பிரபு நியமிக்கப்பட்டுள்ளார்

கோவை ஜூன்:03

டெல்லி நடைபெற்ற சிறப்புமிக்க விழாவில் சி.எம். விஷ்ணு பிரபு,இந்தியாஆசியான் வர்த்தக கவுன்சிலின் வர்த்தகத் தூதராக அதிகாரப்பூர்வமாக நியமிக்கப்பட்டார்.இந்த நியமனம்,இந்தியா மற்றும் ஆசியான் அமைப்பு நாடுகளான புருனே, கம்போடியா, இந்தோனேஷியா, லாவோஸ், மலேசியா, மியான்மார், பிலிப்பைன்ஸ்,சிங்கப்பூர்,தாய்லாந்து,வியட்நாம் மற்றும் தைமூர்லெஸ்தே ஆகிய நாடுகளுக்கிடையிலான பொருளாதார,வர்த்தக மற்றும் முதலீட்டு ஒத்துழைப்பை மேலும் வலுப்படுத்தும் முக்கியமான நடவடிக்கையாக அமைந்துள்ளது.

இந்த நியமன விழாவில் பல்வேறு நாடுகளின் தூதர்கள்,உயர் ஆணையர்கள்,தூதரக அதிகாரிகள்,தொழில் முனைவோர்,வணிகத் தலைவர்கள்,கொள்கை வகுப்பாளர்கள் மற்றும் சர்வதேச அமைப்புகளின் பிரதிநிதிகள் உள்ளிட்ட முக்கிய பிரமுகர்கள் கலந்துகொண்டனர். இந்நிகழ்வு,பிராந்திய பொருளாதார கூட்டாண்மைகள் மற்றும் சர்வதேச வர்த்தக உறவுகளின் வளர்ந்து வரும் வர்த்தக முக்கியத்துவத்தை வெளிப்படுத்தியது.

விழாவில் பேசிய மூத்த பிரமுகர்கள், சர்வதேச வணிக உறவுகள்,வர்த்தக மேம்பாடு மற்றும் பொருளாதார ஒத்துழைப்பு துறைகளில் விஷ்ணு பிரபுவின் விரிவான அனுபவத்தை பாராட்டினர்.அவரது நியமனம்,இந்தியாமற்றும்ஆசியான் உறுப்பு நாடுகளுக்கிடையிலான இருதரப்பு மற்றும் பன்முக வர்த்தக வாய்ப்புகளை மேம்படுத்தவும்,முதலீடுகளை ஊக்குவிக்கவும்,வணிக நிறுவனங்களுக்கிடையிலான ஒத்துழைப்பை வலுப்படுத்தவும் முக்கிய பங்காற்றும் என அவர்கள் தெரிவித்தனர்.

மேலும்,திறன் மேம்பாடு,நிலையான வளர்ச்சி,உள்கட்டமைப்புஒத்துழைப்பு, தொழில்நுட்ப பரிமாற்றம்,சுகாதாரம்,கல்வி மற்றும் பொருளாதார தூதரக உறவுகள் உள்ளிட்ட துறைகளில் இந்தியா நம்பகமான பங்களிப்பு நாடாக உருவெடுத்து வருவதை அறிக்கை வலியுறுத்துகிறது. அதேசமயம், வளரும் நாடுகளுக்கிடையிலான ஒத்துழைப்பை வலுப்படுத்துவதிலும்,பரஸ்பர நன்மை பயக்கும் கூட்டாண்மைகளை உருவாக்குவதிலும் இந்தியாவின் உறுதிப்பாட்டை இது எடுத்துரைக்கிறது.

இந்தியாஆசியான் வர்த்தக கவுன்சில்,இந்தியா மற்றும் ஆசியான் உறுப்பு நாடுகளான புருனே,கம்போடியா, இந்தோனேஷியா, லாவோஸ், மலேசியா,மியான்மார்,பிலிப்பைன்ஸ்,சிங்கப்பூர்,தாய்லாந்து,வியட்நாம் மற்றும் தைமூர்லெஸ்தே ஆகியவற்றிற்கிடையேயான வர்த்தகம்,முதலீடு,வணிக ஒத்துழைப்பு மற்றும் பொருளாதார தூதரக உறவுகளை மேம்படுத்தும் நோக்கில் செயல்படும்

முக்கிய தளமாகும்.மூலோபாய முயற்சிகள்,வணிகக் கருத்தரங்குகள்,வர்த்தகப் பயணங்கள் மற்றும் கொள்கை ஆதரவு நடவடிக்கைகள் மூலம் பிராந்திய பொருளாதார ஒருங்கிணைப்பை வலுப்படுத்துவதோடு,பரஸ்பர நன்மை பயக்கும் கூட்டாண்மைகளை உருவாக்குவதற்கும் இந்த அமைப்பு பாடுபட்டு வருகிறது.



தருமபுரி மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் உள்ள அதியன் கூட்டரங்கில் மாவட்ட ஆட்சியர் சரவணன் தலைமையில் மக்கள் குறைதீர்க்கும் நாள் கூட்டம் நடைபெற்றது. இந்த கூட்டத்தில் பொதுமக்கள் சாலை வசதி. குடிநீர் வசதி. பேருந்து வசதி. பட்டா சிட்டா பெயர் மாற்றம். முதியோர் உதவித்தொகை மற்றும் மாற்றுத் திறனாளிகளுக்கான உதவித்தொகை வேண்டி ஆட்சியரிடம் மனுக்களை அளித்தனர். மனுக்களை பெற்றுக்கொண்ட ஆட்சியர் சம்பந்தப்பட்ட துறை அதிகாரிகளிடம் உடனடியாக நடவடிக்கைஎடுக்ககூறிவலியுறுத்தினார்.இந்தகூட்டத்தில்மாவட்டவருவாய்அலுவலர் கவிதா, தனி மாவட்ட வருவாய் அலுவலர் சந்திரசேகரன், மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை திட்ட இயக்குனர் ரூபன் சங்கர்ராஜ், மகளிர் திட்ட இயக்குனர் சுந்தர்ராஜன், தனித்துணை ஆட்சியர் செல்வி உள்ளிட்ட தொடர்புடைய அரசு துறை அலுவலர்கள் உடனிருந்தினர்.



# ஜி. டி. நோட்ல லீவு கிடைக்காததால் எல்லாத்தையும் ஒப்படைத்து விட்டு கிளம்பிய பெண் இன்ஸ்பெக்டர்

திருப்பூர், ஜூன் 3

பெண் இன்ஸ்பெக்டர் ஸ்டேஷன் ஜி. டி. நோட்ல லீவு கிடைக்காததால் கடும் மன உளைச்சலில் இருக்கிறேன் என்று எழுதி வைத்துவிட்டு பிஸ்டல், வாக்கி, டாக்கிங், எல்லாத்தையும் ஒப்படைச்சிட்டு லீவுல கிளம்பிட்டாங்க,,

அனுப்பர்பாளையம் மன உளைச்சல்!! தன் குடும்ப உறுப்பினர் கல்யாணத்துக்காக 15 வேலம்பாளையம் பெண் இன்ஸ்பெக்டர் பத்து நாள் லீவு கேட்டிருக்கிறாங்க ஆனா இன்னொரு இன்ஸ்பெக்டருக்கு லீவுல போனதால இவருக்கு லீவு கொடுக்க உயர் அதிகாரிகள் மறந்துட்டாங்க இதனால அந்த பெண் இன்ஸ்பெக்டர் பெண் இன்ஸ்பெக்டர் ஸ்டேஷன் ஜி. டி. நோட்ல லீவு கிடைக்காததால் கடும் மன உளைச்சலில் இருக்கிறேன் என்று எழுதி வைத்துவிட்டு பிஸ்டல், வாக்கி, டாக்கிங், எல்லாத்தையும் ஒப்படைச்சிட்டு லீவுல கிளம்பிட்டாங்க,,

தக்கலை

# கல்வி சரகத்தில் அரசு பள்ளிகளை ஆய்வு செய்த கலெக்டர்



நாகர்கோவில், ஜுன். 3

குமரியில் நாளை புதிய ஆண்டு கல்விக்காக பள்ளிகள் திறக்கப்படுகிறது. இந்த நிலையில் தக்கலை சரகத்திற்குட்பட்ட, கண்ணாட்டுவிளை அரசு தொடக்கப்பள்ளி மற்றும் இரணியல் அரசு மேல்நிலைப்பள்ளியில் நடைபெறும் பயிற்சி வகுப்பினை மாவட்ட ஆட்சித்தலைவர் மு.பிரதாப் நேற்று நேரில் பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டார். பின்னர் அவர் கூறியதாவது:

தமிழ்நாடு அரசு அரசு பள்ளிகளில் பயிலும் மாணவர்களும் தனியார் பள்ளிகளுக்கு இணையாக கல்வி பயில வேண்டும் என்ற உயரிய நோக்கத்தில் அரசு திட்டங்களை சிறப்பாக செயல்படுத்தி வருகிறது.

மேலும் மாணவர்கள் இயற்கையான சூழலில் கல்வி கற்கும் வகையில் பள்ளி வளாகங்கள், சுற்றுப்புற சூழல், கழிப்பறைகள், குடிநீர் வசதி, வகுப்பறைகள் உள்ளிட்ட அடிப்படைத் தேவைகளை ஏற்படுத்திட வேண்டும். ஆசிரியர்களாகிய நீங்கள் அரசு பள்ளிகளில் பயிலும் மாணவர்களுக்கு தமிழக அரசால் வழங்கப்படும் மருத்துவம் உள்ளிட்ட மேல்படிப்புகளுக்கான முன்னுரிமை, அரசு வேலைகளில் முன்னுரிமைகள் குறித்து மாணவ, மாணவியர்கள் மற்றும் அவர்களின் பெற்றோர்களிடம் எடுத்துக் கூற வேண்டும். ஒவ்வொரு மாணவர்களிடையேவுள்ள தனித்திறமைகளை கண்டறிந்து, அத்திறமைகளை வெளிக்கொணர வேண்டும் என கேட்டுக்கொள்கிறேன்.

மேலும், ஒன்றாம் வகுப்பு முதல் மூன்றாம் வகுப்பு வரை தமிழ்நாடு அரசால் அறிமுகப்படுத்தப்பட்டுள்ள புதிய பாடத்திட்டத்திற்கான பயிற்சி வகுப்பில் கலந்து கொண்டுள்ள ஆசிரியர்கள் தற்போதைய காலகட்டத்தில் மாணவர்களுக்கு எந்த வகையில் கல்வி கற்றுக் கொடுக்க வேண்டும் என நன்கு புரிந்து கற்றுக் கொடுக்க வேண்டும். குறிப்பாக விரைவுப் பலகையினை நன்கு பயன்படுத்திட கற்றுக் கொடுக்க வேண்டும். மேலும் புத்தகத்தில் இடம் பெற்றுள்ள பாடங்களை கற்றுக்கொடுக்கும்போது மாணவர்கள் எளிதாக, ஆர்வமாக புரிந்து கொள்ளும் வகையில் கற்றுக் கொடுக்க வேண்டும். அரசு பள்ளிகளில் மாணவர்கள் சேர்க்கை விகிதத்தை அதிகப்படுத்திட முதன்மை கல்வி அலுவலர், மாவட்ட கல்வி அலுவலர்கள், வட்டார கல்வி அலுவலர்கள், அனைத்து தலைமையாசிரியர்கள், ஆசிரியர்கள் உள்ளிட்டோர் முழு அர்ப்பணிப்புடன் பணியாற்றிட வேண்டும் என கேட்டுக்கொள்கிறேன். என கூறினார்.

நடைபெற்ற ஆய்வின்போது மாவட்ட கல்வி அலுவலர் பிரின்ஸ் ஆரோக்கிய ராஜ், வட்டார கல்வி அலுவலர் தஜெயசிங், தலைமை ஆசிரியர்கள் ஜோஸ் பிரகாஷ் (கண்ணாட்டுவிளை அரசு தொடக்கப்பள்ளி) திதமிழ்ச்செல்வி (இரணியல் அரசு மேல்நிலைப்பள்ளி) ஆசிரியை சாரதா உட்பட பலர் கலந்து கொண்டார்கள்.



கோவை

# ரெங்காஸ் கல்ச்சுரல் அகாடமி சார்பில் இலங்கையில் நடைபெற்ற சர்வதேச பரதநாட்டியத்தில் சாதனை

கோவை ஜுன்:03

கோவையை சேர்ந்த ரெங்காஸ் கல்ச்சுரல் அகாடமி நடனப்பள்ளி மாணவர்கள் இலங்கை நாடு கொழும்புவில் நடைபெற்ற சர்வதேச பரதநாட்டியத்தில் கலந்து கொண்டு சாதனை படைத்துள்ளனர்.கோவை இரயில் நிலையத்தில் குடும்பத்தினர் மற்றும் உறவினர்கள் பொன்னாடை போற்றி மாலை அணிவித்தும் வரவேற்றனர்.

இது தொடர்பாக அகாடமியின் நிறுவனர் சுபா வசந்த் செய்தியாளர்களிடம் கூறுகையில்

இலங்கையில் நடைபெற்ற சர்வதேச பரதநாட்ட போட்டியில் பங்கேற்றதாகவும்,ஏற்கனவே மலேசியாவில் நடைபெற்ற நிகழ்ச்சியில் கலந்து கொண்டு பின்னர் இலங்கைக்குச் சென்றதாகவும் தமிழ்நாடு மட்டும் இல்லாமல் இந்தியா முழுவதும் இருந்து பல்வேறு மாநிலத்தை சேர்ந்த மாணவிகள் கலந்து கொண்டதாகவும் தெரிவித்தார்.

மேலும் சமூக வலைதளங்களில் படித்து தெரிந்து கொள்ளாமல் அந்த நாட்டு மக்களுடன் சேர்ந்து பழகுவது அவசியம் அதன் மூலம் பல்வேறு நன்மைகள் கிடைக்கும் என்றும் நமது பாரம்பரியமான பரதநாட்டியத்தை அடுத்த நாட்டிற்கு கொண்டு சென்றது மிகவும் மகிழ்ச்சி அளிப்பதாக தெரிவித்தார்.

ஜூலை மாதம் நடைபெறும் போட்டியில் பங்கேற்க இருப்பதாகவும் குழந்தைகளுக்கு பள்ளி இருப்பதினால் அது குறித்து ஆலோசித்து பின்னர் முடிவு செய்யப்படும் என்றும் குழந்தைகள் இதில் நடனமாடியது அனைவரும் கவர்ந்ததாக தெரிவித்தார்.

மத்திய அரசு இதற்கு ஒத்துழைப்பு வழங்குவதாகவும் தற்பொழுது பள்ளி விடுமுறை என்பதால் எளிதாக சென்று விட்டதாகவும், குழந்தைகள் மொபைல் ஃபோனில் தங்களுக்கு ஏற்றவாறு பயன்படுத்தினால் அவர்களுக்கு உதவிகரமாக இருக்கும் என தெரிவித்தார்.

நாகர்கோவில் அருகே

# வியாபாரியை தாக்கி ரூ 24 ஆயிரம் பறிமுதல் ரவுடிகள் 2 பேர் கைது

நாகர்கோவில், ஜூன். 3

நாகர்கோவில் ஆசாரிப்பள்ளம் பகுதியை சேர்ந்தவர் அஸ்நாத் (29). காய்கறி வியாபாரம் செய்து வருகிறார். இவர் சம்பவ தினம் தனது உறவினர் வீட்டு கிரகப்பிரவேசம் நிகழ்ச்சிக்கு காய்கறிகளை சப்ளை செய்து விட்டு, அதற்கான பணத்தை பெறுவதற்காக தெங்கம் புதூர் பகுதிக்கு சென்று கொண்டிருந்தார். அப்போது கூகுள் மேப்பை பயன்படுத்தி செல்லும்போது, வழிமாறி அவர் அரியப்பெருமாள் நல்லூர் பகுதிக்கு சென்று விட்டார். அங்கு மது அருந்திக் கொண்டிருந்த கும்பல் ஒன்றிடம் வழி கேட்டபோது அவர்கள் தகராறில் ஈடுபட்டு அவரிடம் இருந்த பணத்தை பறிக்க முயன்றனர். மேலும் அத்துமீறி அஸ்நாத்தின் பாக்கெட்டில் இருந்த 24 ஆயிரம் பணத்தை பறித்துக் கொண்டவர்கள்.

பின்னர் அஸ்நாத்தை தாக்கினார்கள். உயிரை காப்பாற்றிக் கொள்ள அங்கிருந்து ஓடிய அஸ்நாத் அருகில் இருந்த பழைய ஆற்றில் குதித்து சுமார் 4 மணி நேரம் ஆற்று ஓரத்தில் இருந்த செடிக்குள் பதுங்கி இருந்துள்ளார். பின்னர் கரைக்கு வந்தவர் தனது தந்தைக்கு தகவல் தெரிவித்துள்ளார். காயமடைந்த அஸ்நாத் குமரி அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டார். இது குறித்த புகாரின் பேரில் சுசீந்திரம் போலீசார் விசாரித்த போது புத்தளம் பகுதியை சேர்ந்த விஜய் மற்றும் பிரடி (35), பறக்கை பகுதியை சேர்ந்த ஸ்டாலின் (31) தெங்கம் புதூரை சேர்ந்த ஆரோக்கியராஜ் (23) உள்ளிட்ட கும்பல் என்று தெரிய வந்தது. தொடர்ந்து போலீஸ் வழக்கு செய்து ஸ்டாலின் மற்றும் ஆரோக்கிய ராஜ் ஆகிய இருவரை கைது செய்தனர். கைது செய்யப்பட்ட ஸ்டாலின் மீது ஏற்கனவே 14 வழக்குகளும், ஆரோக்கியராஜ் மீது 6 வழக்குகளும் நிலுவையில் உள்ளது. இருவரும் ரவுடிகள் பட்டியலில் உள்ளனர். மேலும் மேலும் இரண்டு பேரை போலீசார் தேடி வருகின்றனர்.

# தூத்துக்குடி: கொலை வழக்கில் லாரி ஓட்டுநருக்கு ஆயுள் தண்டனை

தூத்துக்குடி, ஜூன் 3

தூத்துக்குடி அருகேயுள்ள முள்ளக்காடு பகுதியைச் சேர்ந்த தட்சிணாமூர்த்தி (வயது 52), லாரி ஓட்டுநர். இவருடைய மனைவி வசந்தா. இவருடைய பெயரில் உள்ள பூர்வீகச் சொத்தில், வசந்தாவின் அண்ணனும் உப்பளத் தொழிலாளியுமான காசி(50) என்பவர், தனக்கும் பங்கு வேண்டும் என்று கேட்டுள்ளார். இதனால் இவர்களுக்கு இடையே முன்விரோதம் ஏற்பட்டுள்ளது.

கடந்த 15.6.2020 அன்று காசி மற்றும் அவரது மகன் சதீஷ்குமார் ஆகியோர் முத்தையாபுரம் நேசமணி நகர் பகுதியில் நின்றுகொண்டிருந்தனர். அப்போது அங்கு வந்த தட்சிணாமூர்த்தி, அவரது மனைவி வசந்தா, மகள் பரிபூரண முத்துச்செல்வி ஆகியோர் காசி, சதீஷ்குமார் ஆகியோரை சரமாரியாக அரிவாளால் வெட்டியுள்ளனர்.

இதில் பலத்த காயமடைந்த 2 பேரும் தூத்துக்குடி அரசு மருத்துவமனையில் சிகிச்சைக்காக சேர்க்கப்பட்டனர். அங்கு சிகிச்சை பலனின்றி காசி பரிதாபமாக உயிரிழந்தார். இதைத் தொடர்ந்து முத்தையாபுரம் காவல்துறையினர் கொலை முயற்சி வழக்கை, கொலை வழக்காக மாற்றிப்பதிவு செய்து தட்சிணாமூர்த்தி உள்ளிட்ட 3 பேரைக்கைது செய்தனர். இந்த வழக்கின் விசாரணை தூத்துக்குடி முதலாவது கூடுதல் அமர்வு நீதிமன்றத்தில் நடைபெற்று வந்தது.

வழக்கை விசாரித்த நீதிபதி தாண்டவன், குற்றம் சாட்டப்பட்ட தட்சிணாமூர்த்திக்கு ஆயுள் தண்டனையும், ரூ.10 ஆயிரம் அபராதமும் விதித்து நேற்று தீர்ப்பளித்தார். போதிய ஆதாரங்கள் இல்லாததால் வசந்தா, பரிபூரண முத்துச்செல்வி ஆகியோர் வழக்கிலிருந்து விடுவிக்கப்பட்டனர். இந்த வழக்கில் அரசு தரப்பில் அரசு வழக்கறிஞர் ஆனந்த் கேபிரியேல் ராஜ் ஆஜராகி வாதாடினார்.





தருமபுரியில்

# வீடுகளுக்குள் மழை நீர் புகுந்ததால் பொதுமக்கள் சாலை மறியல்

தருமபுரி ஜூன் 03

தருமபுரி மாவட்டத்தில் கடந்த இரண்டு வாரங்களாக மழை பெய்து வருகிறது. தருமபுரி டவுன் பகுதிகளில் கன மழை பெய்தது. இந்த மழையால் குமாரசாமிபேட்டை 10, 11 வார்டுகளில் உள்ள குடியிருப்பு பகுதிகளில் மழை நீர் தேங்கி நின்றது. இந்த மழை நீருடன் கழிவு நீரும் கலந்து தாழ்வான பகுதியில் உள்ள வீடுகளுக்குள் புகுந்தது. இதனால் பொதுமக்கள் அவதியடைந்தனர் இது குறித்து நகராட்சி அதிகாரிகளுக்கு தகவல் தெரிவித்தும் காலை வரை மழை நீரை வெளியேற்ற நடவடிக்கை எடுக்கவில்லை. இதனால் ஆத்திரமடைந்த பொதுமக்கள் நகராட்சி நிர்வாகத்தை கண்டித்து குமாரசாமிப்பேட்டையில் தருமபுரி பென்னாகரம் சாலையில் திடீரென மறியல் போராட்டத்தில் ஈடுபட்டனர். இதனால் அந்தப் பகுதியில் போக்குவரத்து பாதிக்கப்பட்டது. இது குறித்து தகவல் அறிந்து வந்த நகர காவல்துறையினர் பொதுமக்களிடம் பேச்சுவார்த்தை நடத்தினர். அப்போது மழை நீரை வெளியேற்ற நடவடிக்கை எடுப்பதாக அதிகாரியின் உறுதி அளித்தனர். இதையடுத்து பொதுமக்கள் மறியலை கைவிட்டு கலைந்து சென்றனர். இந்த சாலை மறியலால் அந்த பகுதியில் பரபரப்பு ஏற்பட்டது.

தஞ்சாவூரில்

# போராட்டம் நடத்த முயன்ற விவசாயிகள் போலீசார் இடையே தள்ளுமுள்ளு

தஞ்சாவூர்ஜூன் 3

அனைத்து பயிர் கடன்களையும் முழுமையாக தள்ளுபடி செய்ய கோரி தஞ்சாவூர் மாவட்ட கலெக்டர் அலுவலகம் முன்பாக போராட்டம் நடத்த முயன்ற விவசாயிகளுக்கும் காவல் துறையினருக்கும் இடையே தள்ளுமுள்ளு ஏற்பட்டது

கூட்டுறவு சங்கங்களில் விவசாயி கள் பெற்ற பயிர் கடன்கள் முழுவது ம் தள்ளுபடி செய்யக் கோரியும், மேகதாது கர்நாடக அணைக்கட்டும் முயற்சியை மத்திய அரசு தடுத்து நிறுத்த வலியுறுத்தியும், தமிழ்நாடு காவிரி விவசாயிகள் சங்கத்தினர் கலெக்டர் அலுவலகம் முன்பு ஆர்ப்பாட்டம் நடத்துவதற்காக தமிழ் பல்கலைக்கழக காவல் நிலையம் அருகில் இருந்து ஊர்வலமாக புறப் பட்டனர் . இதில் சங்க தலைவர் பழனியப்பன் தலைமையில் ஏராளமான விவசாயிகள் கலந்து கொண்டனர்

கலெக்டர் அலுவலக முன்பு சென்ற இவர்களை காவல்துறை யினர் தடுத்து நிறுத்தினர்.இதனால்விவசாயிகளுக்கும், காவல் துறை யினருக்கும் இடையே தள்ளு முள்ளு ஏற்பட்டது .அப்போது விவசாயிகள் சிலரை காவல்துறை யினர் தாக்கி, வேனில் ஏற்ற முயன்றதால், இரு தரப்பினருக்கும் வாக்குவாதம் வலுவடைந்தது. அப்போது விவசாயிகளை காவல் துறையினர் ஒருமையில் பேசியதாலும், தாக்கியதாலும், அதிருப்தி அடைந்த விவசாயிகள் தரையில் அமர்ந்து போராட்டத்தில் ஈடுபட்ட னர் .இதில் விவசாயிகளை தாக்கி ய, காவல் துறை மீது நடவடிக்கை எடுக்க வேண்டும் என வலியுறுத்தி முழக்கங்கள் எழுப்பி ன ர்

பின்னர், காவல் துறையினர் சமாதானப்படுத்தியதை தொடர்ந்து ஆட்சியாளரிடம் மனு அளிக்க 5 விவசாயிகள் மட்டும் ஆட்சியரத்து க்கு செல்ல அனுமதிக்கப்பட்டனர் கலெக்டரின் மனு அளித்த விவசா யிகள் கலைந்து செ ன்ற ன ர்

இதனிடையே விவசாயிகள் போராட்டத்தையொட்டி கலெக்டர் அலுவலக வாயிலில் தடுப்புகள் அமைத்து ,அங்கு வந்த பொதுமக்க ளிடம் போலீசார் விசாரித்து உள்ளே அனுப்பினார். அப்போது பொது மக்கள் குறைதீர்க்கம் கூட்டத்தில் மனு அளிப்பதற்காக வந்தவர்களில் சிலர் பச்சை துண்டு அணிந்து வந்தனர் ,அவர்களிடம் பச்சைதுண்டு அணிந்து வந்தால் அனுமதி யில்லை என காவல்துறையினர் கூறினர். இதனால் காவல்துறை யினருக்கும், விவசாயிகளுக்கும் இடையே வாக்குவாதம் ஏற்பட்டது

# திருப்பூர்: கஞ்சா சாக்லெட்டுடன் பீகார் வாலிபர் கைது

பல்லடம், ஜூன் 3



திருப்பூர் மாவட்டம், பல்லடம் அரசு கலைக்கல்லூரி பின்புறம் கஞ்சா மற்றும் கஞ்சா சாக்லெட் விற்பனை நடைபெறுவதாக போலீசாருக்கு ரகசிய தகவல் கிடைத்தது. இதையடுத்து போலீசார் அங்கு சென்று கண்காணிப்பு பணியில் ஈடுபட்டனர். அப்போது அங்கு சந்தேகத்துக்கு இடமான வகையில் நின்று கொண்டிருந்த வாலிபரை பிடித்து சோதனை செய்தனர்.

அப்போது அவரிடம் கஞ்சா, கஞ்சா சாக்லெட் இருப்பது தெரிய வந்தது. விசாரணையில் அவர் பீகாரைச் சேர்ந்த கஜேந்திரகுமார் (வயது 26), என்பதும், ஒடிசாவில் இருந்து கஞ்சா மற்றும் கஞ்சா சாக்லெட்டுகளை வாங்கி வந்து விற்பனை செய்ததும் தெரிய வந்தது. இதையடுத்து அவரை கைது செய்த போலீசார் அவரிடமிருந்து 1 கிலோ கஞ்சா மற்றும் 1கிலோ கஞ்சா சாக்லெட்டுகள் ஆகியவற்றை பறிமுதல் செய்தனர்.

ராமநாதபுரத்தில்

# கண்டறியப்பட்ட 2 ஆயிரம் ஆண்டுக்கு முந்தைய தமிழ் கல்வெட்டு



ராமநாதபுரம், ஜூன் 3

ராமநாதபுரம் மாவட்டத்தில் உள்ள முதுகுளத்தூர் அருகே ஆப்பனூர் என்ற கிராமம் உள்ளது. இங்குள்ள ஆண்டியேந்தல் பகுதியில் அமைந்திருக்கும் அரியநாச்சி அம்மன் திருக்கோயில் வளாகத்தில் புதையுண்டு கிடந்த கல் ஒன்றை, இரண்டு ஆண்டுகளுக்கு முன்பு இக்கோயிலில் நடைபெற்றகுடமுழுக்குதிருப்பணியின் போது மீட்டெடுத்தனர். இதை ஆசிரியர் முனியசாமி கண்டுபிடித்துள்ளார்.

இந்த கல்வெட்டினைப் பாண்டிய நாட்டு வரலாற்று ஆய்வு மையத்தின் செயலாளரும், தொல்லியல் அறிஞருமான சாந்தலிங்கமும், அவரது உதவி ஆய்வாளர் உதயகுமாரும் நேரில் பார்வையிட்டனர். அந்த கல்வெட்டில் உள்ள செய்தியை படித்தனர். அதன் மூலம் "ஆபன்னூர் ஏறி மாண்டு விழுந்த அத்தியன் கீரன் கல்" என்ற வரலாற்றுத் தகவல் கிடைத்துள்ளது.

பாண்டிய மண்டலத்தின் மையப்பகுதியில் கண்டறியப்பட்டுள்ள பொ.யு.மு. முதலாம் நூற்றாண்டினைச் சார்ந்ததாகக் கருதப்படும் இந்த நடுகல் கல்வெட்டு, தமிழர்களின் 2 ஆயிரம் ஆண்டு கால எழுத்து மரபை மீண்டும் ஒருமுறை உலகிற்குப் பறைசாற்றியுள்ளது.

# நடிகை தீபாவின் தந்தைக்கு அரிவாள் வெட்டு

## 2 பேர் கைது, 3 பேருக்கு போலீஸ் வலைவீச்சு




தூத்துக்குடி, ஜூன் 3

தூத்துக்குடி அருகே உள்ளமுத்தையாபுரம் மகாலட்சுமி நகர் பகுதியைச்சேர்ந்தவர் புலவர் கணேசன் (வயது 70). இவரது மகள் தீபா, சின்னத்திரை நடிகை ஆவார். இவர் சில சீரியல்கள் மற்றும் திரைப்படங்களிலும் நடித்துள்ளார். இந்த நிலையில், புலவர் கணேசன் நேற்று முன்தினம் மாலையில் முத்தையாபுரம் பஜாரில் உள்ள டீக்கடை அருகே நின்று கொண்டிருந்தார்.

அப்போது அங்கு வந்த மர்ம நபர்கள், தாங்கள் மறைத்து வைத்திருந்த அரிவாளை எடுத்து புலவர் கணேசனை சரமாரியாக வெட்டினர். இதில் அவர் பலத்த காயமடைந்தார். இதைப் பார்த்ததும் அருகில் இருந்த ஒருவர் தடுக்க முயன்றார். ஆனால் மர்ம நபர்கள் அவரையும் வெட்டியதில், அவரது கையிலும் வெட்டுக் காயம் ஏற்பட்டது. இதையடுத்து அந்த மர்ம நபர்கள் அங்கிருந்து தப்பிச் சென்றுவிட்டனர்.

காயமடைந்த 2 பேரும் மீட்கப்பட்டு தூத்துக்குடி அரசு மருத்துவமனையில் சிகிச்சைக்காக சேர்க்கப்பட்டனர். அங்கு அவர்களுக்கு தீவிர சிகிச்சை அளிக்கப்பட்டு வருகிறது.

இதுகுறித்து முத்தையாபுரம் போலீசார் வழக்குப்பதிவு செய்து விசாரணை நடத்தினர். இதில் தொடர்புடைய தூத்துக்குடி சக்திநகர் 1வது தெருவைச் சேர்ந்த உச்சிமாகாளி மகன் பொன்ராஜ்(25) மற்றும் இசக்கி(22) ஆகிய 2 பேரை போலீசார் கைது செய்தனர். மேலும் தலைமறைவாக உள்ள மற்ற 3 பேரை போலீசார் தீவிரமாக வலைவீசி தேடி வருகின்றனர். இந்த சம்பவம் முத்தையாபுரம் பகுதியில் பெரும் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.



### தஞ்சாவூர் அடுத்துள்ள கரந்தையில்

# சப்தஸ்தான திருவிழா தொடக்கம்

தஞ்சாவூர் ஜூன் 3

தஞ்சாவூரில் இந்து சமய அறநிலையத் துறை ,தஞ்சாவூர் அரண்மனை தேவஸ்தானம் சார்பில் கரந்தை சப்தஸ்தானம் என்கின்ற ஏழூர் பல்லக்குத் திருவிழா தொடங்கியது

கரந்தை கருணாசாமி கோவிலில் வைகாசி விசாகப்பெருவிழா கொடியேற்றத்துடன் மே 21 ஆம் தேதி தொடங்கியது .தொடர்ந்து, உற்ஸவங்கள் நடைபெற்று வந்த நிலையில் மே 29 ஆம் தேதி தேரோட்டம் நடைபெற்றது.

இதைத்தொடர்ந்து சப்தஸ்தானம் என்கின்ற ஏழூர் பல்லக்கு திருவிழா திங்கட்கிழமை காலை தொடங்கியது. இதில் பெரிய நாயகி உடனாகிய கருணாசாமி என்கின்ற ஸ்ரீ வசிஷ்டேஸ்வரர் பெரிய கண்ணாடி பல்லக்கிலும், மணக்கோலத்தில் அருந்ததி தேவி உடனுறை ஸ்ரீ வசிஷ்ட மகரிஷி சிறிய வெட்டிவேர் பல்லக்கிலும் புறப்பாடு நடை பெற்றது.

இவ்விழாவில் தஞ்சாவூர் அரண் மனை தேவஸ்தான பரம்பரை அறங்காவலர் பாபாஜி ராஜா போன்சிலே, செயல் அலுவலர் சுந்தர்ராசு, கண்காணிப்பாளர் ரவி, மேற்பார்வையாளர்கள் ரமேஷ், ஆடிட்டர் ரவிச்சந்திரன், கயிலை ராமநாதன் உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்

இதையடுத்து வெண்ணாற்றங் கரை ஆனந்த வள்ளி உடனுறை தஞ்சபுரீஸ்வரர் கோயில், திட்டை சுகந்த குந்தாளரம்பிகை உடனுறை வசிஷ்டேஸ்வரர் கோயில், கூடலூர் ஸ்ரீ மீனாட்சி உடனுறை சொர்க்க நாதர்கோயில், புன்னை நல்லூர் மாரியம்மன் கோவில் கைலாச நாத ர் கோயில் ஆகிய இடங்களுக்கு பல்லக்குகள் சென்றன. இதைத் தொடர்ந்து செவ்வாய்க் கிழமை காலை புன்னை நல்லூர் மாரியம்மன் கோயில், கைலாச நாதர் கோயிலில் இருந்து புறப்பட்டு தஞ்சாவூர் கீழவாசல் ஸ்ரீ பாலாம் பிகை உடனுறை பூமாலை வைத்தியநாத சுவாமி கோயிலுக்கு பல்லக் குகள் வந்து சேரும். இதையடுத்து மேல வீதி கொங்கணேஸ்வரர் கோயிலுக்கு சென்று, மாலையில் கரந்தையில் உள்ள மீனாட்சி சுந்தரேஸ்வரர் கோயிலுக்கு சென்று ஏழூர் பல்லக் குகளும், கருணா சாமி கோயிலு க்கு சென்றடையும். அங்கு சுவாமி க்கு பதுமை பூச்சாற்று நிகழ்வு (பொம்மை பூ போடுதல் ) மகா தீபாராதனை நடைபெற உள்ளது

### தொட்டியம் திருவிழாவில் சோகம்

# கதண்டு கடித்து 60 பேர் காயம்



திருச்சி, ஜூன் 3

திருச்சி மாவட்டம் தொட்டியம் அருகே அரசலூர் கிராமத்தில் மகா மாரியம்மன் கோவில் திருவிழாவின் போது, தீச்சட்டி பற்ற வைத்த நெருப்பு அருகில் இருந்த கதண்டுக் கூட்டில் பட்டதால், கதண்டுகள் பறந்து வந்து கடித்ததில் 60க்கும் மேற்பட்ட பக்தர்கள் காயமடைந்தனர். அவர்கள் தொட்டியம் அரசு மருத்துவமனையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டனர். இதனால் அப்பகுதியில் சோகமான சூழ்நிலை நிலவியது.



### திருச்சி அருகே

# பால் வேன் கவிழ்ந்து விபத்து

திருச்சி, ஜூன் 3

துறையூரிலிருந்து கரூர் நோக்கி பால் பாக்கெட்டுகளை ஏற்றிச் சென்ற வேன், சிறுகமணி அருகே ஓட்டுநர் கண் அயர்ந்ததால் எதிரே வந்த கனரக வாகனம் மீது மோதி சாலையில் கவிழ்ந்து விபத்துக்குள்ளானது. இந்த விபத்தில் வேன் ஓட்டுநரின் கால் முறிந்தது. சம்பவ இடத்தில் போலீசார் விசாரணை நடத்தி வருகின்றனர்.



### பள்ளிகள் திறப்பை ஒட்டி

# நாகர்கோவில் மாநகராட்சி மைய சமயற் கூடம்: நகராட்சி ஆணையர் ஆய்வு

நாகர்கோவில், ஜூன். 3

கோடை விடுமுறை முடிந்து தமிழக முழுவதும் பள்ளிகள் நாளை 4 ம் தேதி மீண்டும் திறக்கப்பட உள்ளது. இந்த நிலையில் நாகர்கோவில் மாநகராட்சிக்கு உட்பட்ட பகுதிகளில் காலை உணவு திட்டத்தை சிறப்பாக செயல்படுத்துவதற்காக முன்னேற்பாடுகள் தீவிரமாக நடைபெற்று வருகின்றன.

இதன் ஒரு பகுதியாக நாகர்கோவில் மாநகராட்சி வாட்டர்டேங்க் சாலையில் அமைந்துள்ள காலை உணவு திட்டத்திற்கான ஒருங்கிணைந்த மைய சமையற் கூடத்தை மாநகராட்சி ஆணையர் நிஷாந்த் கிருஷ்ணா நேரில் சென்று பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டார்.

இந்த ஆய்வின் போது சமையல் கூடத்தில் தூய்மை உணவு தயாரிப்பதற்கான மூலப்பொருட்களின் தரம் மற்றும் குறித்த நேரத்தில் பள்ளிகளுக்கு உணவு எடுத்து செல்வதற்கான வாகன வசதிகள் குறித்து அவர் விரிவாக கேட்டறிந்தார். மாணவர்களுக்கு வழங்கப்படும் காலை உணவு மிகவும் சுகாதாரமான முறையிலும், தரமானதாகவும் இருப்பதை உறுதி செய்ய வேண்டும் என்று அலுவலர்களுக்கு ஆணையர் உத்தரவிட்டார்.

இந்த ஆய்வின் போது மாநகராட்சி நல அலுவலர் டாக்டர் சரோஜா, உதவி மாநகர பொறியாளர் ரகுராம் மற்றும் மாநகராட்சி முக்கிய அதிகாரிகள் உடன் இருந்தனர். ஆணையர் சமையல் செய்யும் இடத்தை பார்வையிட்டதுடன் அங்கு பணியாற்றும் ஊழியர்களுக்கு தேவையான ஆலோசனைகளையும் வழங்கினார்.

நாகர்கோவில் மாநகராட்சி பொறுத்தவரை தமிழக முதலமைச்சரின் காலை உணவு திட்டம் விரிவான முறையில் செயல்படுத்தப்பட்டு வருகிறது. மாநகராட்சி எல்லைக்குள் உள்ள 48 அரசு தொடக்கப் பள்ளிகள் மற்றும் 19 அரசு உதவி வரும் பள்ளிகள் என மொத்தம் 67 பள்ளிகளில் பயிலும் மாணவ மாணவிகளுக்கு இந்த மைய சமயக் கூடத்தில் இருந்து தினசரி காலை உணவு சமைத்து வழங்கப்பட உள்ளது. இதன் மூலம் மாநகராட்சி உள்ள மொத்தம் 5,443 மாணவ மாணவிகள் பயன்பெறுகின்றனர்.



# சென்னை துறைமுக வாயு கசிவுக்கான காரணம் என்ன? அதிகாரிகள் விளக்கம்

சென்னை ஜூன் 3

சென்னை துறைமுகத்தில் திடீரென இன்று காலை வாயு கசிவு ஏற்பட்டு உள்ளது. இதனால் சாலையெங்கும் புகை மூட்டம் காணப்படுகிறது. அது காற்றில் விரைவாக பரவி பொதுமக்களுக்கும், சாலையில் செல்லும் வாகன ஓட்டிகளுக்கும் மூச்சு திணறல், இருமல், குமட்டல், கண், உடல் எரிச்சல் ஏற்பட்டு உள்ளது. கப்பலில் இருந்து சல்பேட் வாயு கசிந்துள்ளது என்றும் தீ விபத்து எதுவும் இல்லை என்றும் தகவல் தெரிவிக்கின்றது.

இதனால், தலைமைச்செயலகம் உள்ளேயும் அதிகாரிகள், பொதுமக்கள் உள்ளிட்டோருக்கு பாதிப்பு ஏற்பட்டு உள்ளது. இதனை தொடர்ந்து, துறைமுகத்துக்கு தீயணைப்பு வாகனங்கள் விரைந்துள்ளன. பாதிக்கப்பட்டவர்கள் மீட்கப்பட்டு, ஆம்புலன்சில் அழைத்து செல்லப்படுகின்றனர். ரசாயன பொடிகளை தூவி அதனை தணிக்கும் பணிகள் நடந்து வருகின்றன.

திடீர்வாயு கசிவால், பொதுமக்களுக்கு மூச்சு திணறல் ஏற்பட்டு உள்ளது. சுவாசிக்கவும் அவதிப்படுகின்றனர். பட்டாசு மருந்துபோன்று நெடி ஏற்பட்டு உள்ளது என்று பொதுமக்கள் தெரிவித்து உள்ளனர். இதற்கான காரணம் என்ன ? என்பது பற்றி துறைமுகம் சார்பில் அதிகாரிகள் விளக்கம் அளித்துள்ளனர்.

சென்னை துறைமுகத்தில் உள்ள கன்டெய்னரில் இருந்த சல்பேட் காற்றில் கசிந்துள்ளது. கடும் வெப்பம் ஏற்படுத்திய தாக்கத்தினால் வாயு கசிவு ஏற்பட்டு உள்ளது. விதிமீறல்கள் எதுவும் இல்லை என்று கூறியுள்ளனர். சல்பேட் வேதியியல் மாற்றம் அடைந்து வெண் புகையாக காற்றில் கலந்துள்ளது. காற்றில் வாயு கலவை கலந்திருப்பது உறுதியாகி உள்ளது. இதனால் மூச்சு திணறல் உள்ளிட்ட பாதிப்புகள் ஏற்பட்டு உள்ளது என தகவல் தெரிவிக்கின்றது. சல்பரில் இருந்து புகைதான் வந்தது. தீ விபத்து எதுவும் ஏற்படவில்லை. இதனால், பெரும் விபத்து தவிர்க்கப்பட்டு உள்ளது என்று தீயணைப்பு துறை தெரிவித்து உள்ளது. வாயு கசிவால், தலைமை செயலகத்திற்கு எதிரே இருந்த பொதுமக்களும் அவதியடைந்தனர்.

தீயணைப்பு துறை உடனடியாக சென்று அதனை கட்டுப்படுத்தும் பணியில் ஈடுபட்டு வருகின்றனர். வாயு கசிவால், காற்றில் அம்மோனியா மற்றும் நைட்ரஜன் டை ஆக்சைடு உள்ளிட்ட ரசாயனங்கள் கலந்துள்ளன என மாசு கட்டுப்பாட்டு வாரியம் தெரிவித்து உள்ளது. எனினும், காற்றின் தரக்குறியீடு 68 என்ற அளவில் நல்ல முறையிலேயே உள்ளது என தெரிவிக்கப்பட்டு உள்ளது.

# சிறுமிகளிடம் பாலியல் சீண்டலில் ஈடுபட்ட முதியவர்கள்: அதிர்ச்சி சம்பவம்

நாமக்கல், ஜூன் 3

நாமக்கல் மாவட்டம் குமாரபாளையம் பகுதியில் உள்ள ஒரு கிராமத்தை சேர்ந்தவள் மூன்றரை வயது சிறுமி. இவள் நேற்று காலை தனது வீட்டின் அருகே விளையாடிக் கொண்டிருந்தாள். அப்போது அங்கு வந்த ஒருவர் அந்த சிறுமிக்கு பாலியல் தொல்லை கொடுத்தார். இதை அறிந்த பொதுமக்கள் அந்த நபரை பிடித்து தர்மஅடி கொடுத்தனர். பின்னர் அவரை குமாரபாளையம் போலீஸ் நிலையத்தில் ஒப்படைத்தனர்.

பிடிபட்டவரிடம் போலீசார் நடத்திய விசாரணையில், அவர் அதே பகுதியை சேர்ந்த வரதராஜன் (வயது 59) என தெரியவந்தது. இதே போல், குமாரபாளையம் பகுதியை சேர்ந்தவள் 12 வயது சிறுமி. நேற்று முன்தினம் இந்த சிறுமி தனது வீட்டின் அருகில் விளையாடிக் கொண்டிருந்தாள். அப்போது அங்கு வந்த முதியவர் ஒருவர் அந்த சிறுமியிடம் ஐஸ்கிரீம் வாங்கி கொடுப்பதாக கூறி பாலியல் தொல்லை கொடுத்தார். இதை அறிந்த பொதுமக்கள் அந்த நபரை பிடித்துதர்மஅடிகொடுத்து குமாரபாளையம் போலீசில் ஒப்படைத்தனர்.

விசாரணையில், பிடிபட்டவர் அதே பகுதியை சேர்ந்த மணி (62) என்று தெரிய வந்தது. அவரை போலீசார் கைது செய்தனர். இதனிடையே குமாரபாளையத்தில் பள்ளிபாளையம் பிரிவு சாலை, குமாரபாளையம் போலீஸ் நிலையம் முன்புறம் என 2 இடங்களில் மீண்டும் சிறுமியின் உறவினர்கள் சுமார் 5 மணி நேரம் சாலை மறியலில் ஈடுபட்டனர். இதை அறிந்த சேலம் சரக டி.ஐ.ஜி. (பொறுப்பு) சாமிநாதன், மாவட்ட போலீஸ் சூப்பிரண்டுகள் விமலா (நாமக்கல்), மற்றும் உயர் அதிகாரிகள் விரைந்து வந்து பேச்சுவார்த்தை நடத்தியதை அடுத்து போராட்டம் முடிவுக்கு வந்தது.

இந்நிலையில் இந்த பாலியல் சீண்டல் சம்பவம் தொடர்பாக நாமக்கல் மாவட்ட போலீசார் விளக்கம் அளித்துள்ளனர்.

அதில், 2 சிறுமிகளும் ஒரே சம்பவத்தில் பாதிக்கப்பட்டவர்கள் என்பது போன்ற செய்தி தவறான தகவலாகும். 2 சம்பவங்களும் வெவ்வேறு இடங்களில் நடைபெற்ற தனித்தனியானசம்பவங்களாகும்.

இரு வழக்குகளிலும் தொடர்புடைய குற்றவாளிகள் உடனடியாக கைது செய்யப்பட்டு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. 13 வயது சிறுமியை பாலியல் சீண்டலுக்கு உட்படுத்தியதாக ஒருவர் மீது வழக்கு பதிவு செய்யப்பட்டுள்ளது. 3 வயது சிறுமியை பாலியல் சீண்டலுக்கு உட்படுத்தியதாக மற்றொரு நபர் மீதும் தனித்தனியாக வழக்குப்பதிவு செய்யப்பட்டுள்ளது.

இரு வழக்குகளிலும் போலீசார் விரைவான நடவடிக்கை மேற்கொண்டு குற்றவாளிகளை கைது செய்துள்ளனர். கடும் தண்டனை பெற்றுத்தர தேவையான அனைத்து சட்ட நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

**பொது அறிவிப்பு**

கன்னியாகுமரி மாவட்டம், அகஸ்தீஸ்வரம் தாலுகா, வெட்டூர்ணிமடம், பரமார்த்த லிங்கபுரம், சர்ச் தெரு, கதவு எண்.204ல் வசிக்கும் பால்ராஜ்.D அவர்களுக்கு வேண்டி நாகர்கோவில் அட்வகேட் L. இனோக் ஷாடிஸ்னி பொது மக்களுக்கு தெரியப்படுத்துவது என்னவென்றால் எனது கட்சிக்காரருக்கு சொந்தமான வடசேரி சார்பதிவாளர் அலுவலகத்தில் பதிவு செய்யப்பட்டதுமான ஆவண எண்கள். 1139/1982 மற்றும் 384/1985ம் வருடத்திய அசல் ஆவணமானது வெட்டூர்ணிமடத்தில் இருந்து வடசேரிக்கு பேருந்தில் செல்லும் வழியில் தொலைந்து விட்டது.

மேற்படி அசல் ஆவணத்தினை கண்டு எடுத்தவர்கள் கீழ்க்கண்ட முகவரிக்கு தகவல் தெரிவிக்கவோ அல்லது அனுப்பி வைக்குமாறு கேட்டுக் கொள்கிறேன்.

அட்வகேட்,
L.இனோக் ஷாடிஸ்னி,
B.A.,LL.B,
G.I.ஸ்டீபன்சன் மோசஸ் காம்பவுண்ட் பில்டிங்,
M.S.ரோடு, முதல்மாடி,
வெட்டூர்ணிமடம், நாகர்கோவில்,
கன்னியாகுமரி மாவட்டம்.



# மக்கள் தொகை கணக்கெடுப்பு பணியை துல்லியமாக மேற்கொள்ள வேண்டும்

### கலெக்டர் ரேவதி வேண்டுகோள்

தஞ்சாவூர் ஜூன் 3

மக்கள் தொகை கணக்கெடுப்பு பணியை தவறு இன்றி துல்லியமாக மேற்கொள்ள வேண்டும் என்று கலெக்டர் ரேவதி கூறினார்

தஞ்சாவூர் கலெக்டர் அலுவலக கூட்டரங்கில் மக்கள் தொகை கணக்கெடுப்பு அலுவலர்கள், பொறுப்பு அலுவலர்கள் மற்றும் தொழில்நுட்ப உதவியாளர்களுக்கு 3 நாள் பயிற்சி வகுப்பினை கலெக்டர் ரேவதி தொடங்கி வைத்தார் அப்போது அவர் பேசியதாவது

தமிழ்நாட்டில் 2027 மக்கள் தொகை கணக்கெடுப்பில் சுய கணக்கெடுப்பு மற்றும் டிஜிட்டல் முறை கணக்கெடுப்பு முதல் முறையாக அறிமுகப்படுத்தப் பட்டு படுகிறது .பொதுமக்கள் தாங்களாகவே இணையதளம் மூலமாக தங்களது விவரங்களை தெரிவிக்கும் சுய கணக்கெடுப்பு அடுத்த மாதம் ஜூலை 17ஆம் தேதி முதல் தொடங்கி 31ஆம் தேதி வரை நடைபெறுகிறது

கணக்கெடுப்பாளர் மூலம் வீடுகள் தோறும் மேற்கொள்ளப்படும் வீட்டு பட்டியல் மற்றும் வீடுகள் கணக்கெடுப்பு பணிகள் ஆகஸ்ட் மாதம் 1ஆம் தேதி முதல் 30ஆம் தேதி வரை நடைபெறுகிறது .தஞ்சாவூர் மாவட்டத் தில் மக்கள் தொகை கணக்கெடுப்பு பணிக்கு ஊரக மற்றும் நகர்புற பகுதியில் பொறுப்பு அலுவலர்களாக 10 தாசில்தார்கள், 2 மாநகராட்சி ஆணையர்கள், 3 நகராட்சி ஆணையர் கள் 19 பேரூராட்சி செயல் அலுவலர்க ள் 14 ஊராட்சி ஒன்றிய அலுவலர்கள் செயல்பட உள்ளார்கள்

இந்த பயிற்சி சென்னை மக்கள் தொகை கணக்கெடுப்பு இயக்குன ராக அலுவலர்களால் நடத்தப்படு கிறது .மக்கள் தொகை கணக்கெடுப்பு பணியில் ஈடுபடும் அலுவலர்கள் பயிற்சி வகுப்பில் முழுமையாக பங்கு பெற்று வீடுகளில் சரியான முறையில் எவ்வித தவறுகளும் இன்றி துல்லிய மாக கணக்கீடுகள் மேற்கொள்ள வேண்டும் . இவ்வாறு அவர் கூறினார் இதில் மாவட்ட வருவாய் அலுவலர் தியாகராஜன், கலெக்டரின் நேர்முக உதவியாளர் (பொது) தவச்செல்வன், முதன்மை கல்வி அலுவலர் பேபி, தஞ்சாவூர், கும்பகோணம், பட்டுக்கோட்டை வருவாய் கோட்ட அலுவலர்கள், சம்பந்தப்பட்ட துறை அலுவலர்கள் கலந்து கொண்டனர்

# தந்தை கண்டித்ததால் வாலிபர் விஷம் குடித்து தற்கொலை: போலீசார் விசாரணை

தூத்துக்குடி, ஜூன் 3

தூத்துக்குடி மாவட்டம், மெஞ்ஞானபுரம் அருகில் உள்ள நடுகாளான்குடியிருப்பு கிராமம் மேலத் தெருவைச் சேர்ந்தவர் ஸ்ரீதர். இவருடைய மகன் சிவனேஷ் (வயது 19). இவர் எந்த வேலைக்கும் செல்லாமல், தனது நண்பர்களுடன் சேர்ந்து ஊர் சுற்றி வந்ததாகக் கூறப்படுகிறது. இதனை அவரது தந்தை ஸ்ரீதர் தொடர்ந்து கண்டித்து, ஒழுங்காக வேலைக்கு செல்லுமாறு அறிவுறுத்தியுள்ளார்.

தந்தை தன்னைத் திட்டி கண்டித்ததால் கடந்த சில நாட்களாக மிகுந்த மனவேதனையிலும், மனமுடைந்த நிலையிலும் சிவனேஷ் காணப்பட்டுள்ளார். இந்த நிலையில் இச்சம்பவத்தின் தொடர்ச்சியாக ஜே.ஜே.நகர் காட்டுப் பகுதிக்குச் சென்ற சிவனேஷ், அங்கு தான் மறைத்து வைத்திருந்த பூச்சிக்கொல்லி மருந்தை (விஷம்) எடுத்து குடித்துவிட்டு தற்கொலை செய்து கொண்டார்.

இந்த சம்பவம் குறித்து தகவல் அறிந்த மெஞ்ஞானபுரம் காவல் துறையினர் உடனே சம்பவ இடத்திற்கு விரைந்து சென்றனர். உயிரிழந்த சிவனேஷின் உடலைக் கைப்பற்றி, உடற்கூறாய்வுக்காக திருச்செந்தூர் அரசு மருத்துவமனைக்கு அனுப்பி வைத்தனர். மேலும் இந்த தற்கொலை சம்பவம் குறித்து வழக்குப்பதிவு செய்து போலீசார் தீவிர விசாரணை நடத்தி வருகின்றனர்.

# இளம்பெண் பாலியல் வன்கொடுமை வழக்கு: த.வெ.க. நிர்வாகிகள் 2 பேர் கைது

தூத்துக்குடி, ஜூன் 3

தூத்துக்குடி மாவட்டம் ஏரல் அருகே ஆறுமுகமங்கலம் பகுதியைச் சேர்ந்தவர் பாலமுருகன் (வயது 29). இவர் தமிழக வெற்றிக் கழகம் மேற்கு மாவட்ட இளைஞரணி அமைப்பாளராக பொறுப்பில் உள்ளார். இவருடைய நண்பர் ராமநாதபுரம் பகுதியைச் சேர்ந்த ஜெயபால்(27), இவரும் த.வெ.க. நிர்வாகியாக உள்ளார்.

இவர்கள் 2 பேரும் ஸ்ரீவைகுண்டம் அருகேயுள்ள ஒரு பகுதியைச் சேர்ந்த 33 வயது இளம்பெண்ணுக்கு வேலை வாங்கித் தருவதாகக் கூறி, கடந்த 2 நாட்களுக்கு முன்பு காரில் அழைத்துச் சென்றுள்ளனர். பின்னர் அந்த இளம்பெண்ணை ராமநாதபுரம் மாவட்டம் ஏர்வாடியில் உள்ள ஒரு தனியார் விடுதியில் தங்க வைத்துள்ளனர்.

அப்போது அந்த இளம்பெண்ணுக்கு குளிர்பானத்தில் மயக்க மருந்து கலந்து கொடுத்து, 2 பேரும் கூட்டுப் பாலியல் வன்கொடுமையில் ஈடுபட்டதாகக் கூறப்படுகிறது. மயக்கம் தெளிந்த பின்னர் தனக்கு நேர்ந்த கொடூரத்தை அறிந்து அந்த இளம்பெண் அதிர்ச்சியடைந்தார். பின்னர் அங்கிருந்து தப்பி வந்த அவர், இதுகுறித்து ஸ்ரீவைகுண்டம் அனைத்து மகளிர் காவல் நிலையத்தில் புகார் அளித்தார். இளம்பெண்ணின் புகாரின் பேரில், பாலமுருகன் மற்றும் ஜெயபால் ஆகியோர் மீது காவல்துறையினர் வழக்குப்பதிவு செய்து, 2 பேரையும் கைது செய்தனர். பின்னர் அவர்களை நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தி, பாளையங்கோட்டை மத்திய சிறையில் அடைத்தனர். இளம்பெண்ணை கூட்டுப் பாலியல் வன்கொடுமை செய்த த.வெ.க. நிர்வாகிகள் கைது செய்யப்பட்ட சம்பவம் அப்பகுதியில் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.

DHINA TAMIL DAILY : Published and Printed By Rajasingh, Published from 16 C, 246 Cross, Professor Joseph Street, Simon Nagar, Nagercoil - 629001.
Printing at Sree Murugan Printers, 209/A, Vaithyanathapuram, Kottar Post, Nagercoil - 629002. Ph : 99944 66200. Editor : Rajasingh. All Claims are subject to the Nagercoil Jurisdiction.